## தேசிய லொத்தர் சபை – 2017

---

தேசிய லொத்தர் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(ஆ) பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய லொத்தர் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07

நியமத்தின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு வகைக்குரிய நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புக்கள் என்பவற்றின் முகப்பு பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் அல்லது குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான கடன்பட்டோர் மற்றும் செலுத்த வேண்டிய ஏனைய பொறுப்புக்களின் முகப்பு பெறுமதி நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 103 ஆம் பந்தியின் பிரகாரம், ரூபா 235,767,246 ஆன தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் செலவினம் நிதிக்கூற்றுக்களில் ஏனைய செலவினத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

(i) முதலீட்டு ஆதனங்கள் (Investment Property) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா விடுதிகளிலிருந்து மீளாய்வாண்டின் போது காசாக கிடைத்திருந்த ரூபா 827,011 ஆன வாடகை வருமானம் நியமத்தின் 16 ஆம் பந்தியின் பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்படாமை காரணமாக முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தும் தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தும் உருவான காசுப் பாய்ச்சல் அப்பெறுமதியால் குறைவாகவும் மிகையாகவும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 17 ஆவது பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் ரூபா 4,546,578 ஆன ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவு காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 28 ஆவது பந்தியின் பிரகாரம் அந்நிய செலவாணியை உள்நாட்டுப் பணமாக மாற்றியதால் ஏற்பட்ட ரூபா 7,199,256 தொகையான இலாபத்தை வரிக்கு முன் இலாபத்திலிருந்து கழித்து காசுப்பாய்ச்சல் கூற்றில் காசும் காசுக்குச் சமமானவைகளின் ஆரம்ப மீதியில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,120,934,690 ஆன வருமான வரி நியமத்தின் 35 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்கிடலின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களின் விலகல் ரூபா 548,478,160 ஆல் கூடுதலாகவும் வியாபார மற்றும் ஏனைய பொறுப்புக்களின் விலகல் ரூபா 549,999,999 குறைத்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vi) பரிசு மற்றும் ஒதுக்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 480,416,033 தொகை காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வரிக்கு முன் இலாபத்திற்கு சீராக்கப்பட்ட காரணத்தினால் தொழிற்பாட்டு நடவடிக்கைளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

(i) நியமத்தின் 30 மற்றும் 31 பந்தியின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்கு அமுலாக்கப்பட்டிராத ‘‘நிதிக் கூற்றுக்கள் அறிக்கையிடல் நியமங்கள்’’ சபையினால் பின்பற்றப்படாத போதிலும் அது வெளிப்படுத்தப்பட வேண்டும் எனினும் இலங்கை நிதிக்கூற்றுக்கள் அறிக்கையிடல் நியமங்கள் 9, 15 மற்றும் 16 இல் இடமபெற்றுள்ள வேறுபாடு தொடர்பாக அதன் பிரகாரம் வெளிப்படுத்தல் இடம் பெற்றிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12**

(i) நிதிக்கூற்றுக்கள் அறிக்கையில் நியமங்கள் நடப்பு மற்றும் முன்னைய காலப்பகுதிகளில் 46 நடப்பு வரி பொறுப்பு (சொத்துக்கள்), சட்டரீதியாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடப்பட்ட திகதியில் சட்ட ரீதியாக்கப்பட்டுள்ள வரி வீதங்கள் (மற்றும் வரிச் சட்டங்கள்) பயன்படுத்தப்பட்டு வரி அதிகாரிகளுக்கு கொடுப்பனவு செய்யவோ (அவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கோ) எதிர்பார்க்கப்பட்ட வரி தொகையை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட வேண்டும் எனினும் சபையின் வருமானக் கொள்கைக்காக நியமத்தின் ஆலோசணைகள் பின்பற்றப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை.

(ii) நியமத்தின் 81(எ) பந்தியின் பிரகாரம் பிற்போடப்பட்ட (Deferred Tex) தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையினால் முன்னைய ஆண்டுகளுக்குரிய பின்னோக்கிய (Reverse) நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்த ரூபா 64,766,800 ஆன அட்டுறு செலவினத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 35,621,740 ஆன வருமான வரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்நியமத்தின் 62(அ) பந்திக்கு அது மீளாய்வாண்டின் வரிச் செலவினமாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18**

---

நியமத்தின் 9 ஆம் பந்தியின் பிரகாரம், சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட கணக்கிடப்பட்ட வருமானம் அல்லது எதிர்பார்க்கப்பட்ட பெறுவனவு அல்லது கிடைத்த வருமானம் நியாயமான பெறுமதிக்கு அறவிடப்பட வேண்டிய போதிலும் சபையின் வரவு செலவினங்களை இனங்காணும் கொள்கையொன்று அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

---

(i) நியமத்தின் 16 ஆவது பந்தி மற்றும்இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படுகின்ற முகாமைத்துவ ஊழியர் நலன் வகைகளின் கூட்டுமொத்தம் தனித்தனியாக நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) குறுங்கால ஊழியர் நலன்
(ஆ) பின் சேவை நலன்கள்
(இ) ஏனைய நீண்டகால கடன்
(ஈ) முடிவுறுத்தல் நலன்கள்

(ii) நியமத்தின் 25 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தொடர்பாக தீர்வுசெய்யப்படாத மீதிகள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டு கொள்கைகள்**

---

லொத்தர் சீட்டு விற்பனை அடிப்படையில் செலுத்தப்படும் பெறுமதி சேர் வரி அடிப்படையிலான வரி வருமானக் கூற்றின் விற்பனை வருமானத்தில் கழித்து காண்பித்தல் சபையின் கொள்கையொன்றாக இருந்த போதிலும் சபையினால் ஈடுபட்டு (Input) முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரிக்காக மீண்டும் உரித்தாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதிகள் செலவினமாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அடுத்த ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் செலவினம் முன்னோக்கிய (Reverse) நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 54,966,857 தொகை இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 69 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் அட்டுறு செலவினமாக இனங்காணப்பட்டிருந்ததுடன், நாட்குறிப்பு பதிவுகள் மூலம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 48,766,800 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட இலாபமும் 2017 ஆம் ஆண்டின் போது 49,415,642 தொகை வேறு வருமானமொன்றாகவும் ரூபா 5,551,215 செலவினங்களிலிருந்து

கழிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்படி கணக்கீட்டு நடைமுறை காரணமாக 2016 ஆம் ஆண்டின் இலாபம் 13 சதவீத குறை மதிப்பீடொன்றும் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் 39 சதவீத மிகை மதிப்பீடொன்றும் இடம்பெற்றிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டின் போது பின்னோக்கி செயற்படுத்திய அட்டுறு செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட விளம்பர செலவினத்தின் அடிப்படையில் ரூபா 2,396,152 ஆன மேலதிக வரியினை செலுத்த சபைக்கு நேர்ந்திருந்தது.

(iii) மேற்குறித்த கணக்கீட்டு வழு காரணமாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வருமான வரிப் பொறுப்பு முறையே ரூபா 30,231,771 ஆல் குறைத்தும் கணக்கிட்டதால் ரூபா 57,053,511 ஆல் மிகை கணிப்பீடும் இடம்பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட சீட்டிழுப்பிற்கான பரிசில்களுக்கான ஒதுக்கீடுகளில் சேமிக்கப்பட்ட ரூபா 480,416,033 தொகை நிறுத்தி வைத்த இலாபத்திற்கு மீண்டும் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்தமையால் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் குறைந்து காண்பிக்கபட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,355,557 ஆன இழப்பிட்டு நட்டத்தை வரி இலாபம் கணக்கிடும் போது ஆண்டின் தேறிய மிகையுடன் சேர்க்கப்படாதிருந்த காரணத்தினால் வருமான வரி பெறுமதி ரூபா 745,556 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் லொத்தர் சீட்டொன்றின் விலையை ரூபா 30 வரை அதிகரித்த காரணத்தால் ஏற்பட்ட விற்பனை வீழ்ச்சியை தவிர்த்து கொள்வதாக சபையினால் ரூபா 16,525,700 பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த லொத்தர் சீட்டுக்களின் கிரயம் செலவினமொன்றாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் வரி இலாபத்தை கணக்கீடு செய்யும் போது அது தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் லொத்தர் விநியோக முகவர்களினால் சபைக்கு சமர்ப்பிக்கப்படாத 176,313 லொத்தர் சீட்டுக்களுக்காக தண்டப்பணமாக அறவிடப்பட வேண்டிய ருபா 3,526,260 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஊ) சபையினால் தனியார் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,336,575 தொகை 2008 ஏப்ரல் 23 ஆந் திகதி 1546/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் அரசிற்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக கணக்குகளில் தேவையான சீராக்கம் மேற்கொள்ளாமல் அத் தொகை முதலீடுகளின் கீழ் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2016 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது விசேட சீட்டிழுப்புகளின் போது கொள்வனவு செய்யப்பட்டு பரிசுகளாக வழங்கப்படாத ரூபா 682,561 புத்தகப்பெறுமதியான தங்க பவுன்கள், தங்க காசு மற்றும் தங்க ஆபரணங்கள் போன்றவற்றின் நியாயமான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு தேவையான சீராக்கல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படடிருக்கவில்லை.

(ஏ) 2016 ஆம் ஆண்டின் போது கடன் அடிப்படையில் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த உடனடி லொத்தர் சீட்டுக்களிலிருந்து ரூபா 13,174,730

பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக கணக்கீடு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) நிதிக்கூற்றுக்களில் பயன்படுத்தப்பட்ட சமர்ப்பித்தல் முறைமை உட்பட அரச மானியங்களுக்காக பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கை மற்றும் அரச மானியங்களின் தன்மை மற்றும் அளவு போன்ற விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் நிதி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 5,795,000 தொகையான மோட்டார் வாகனத்தின் பெறுமதி ஏனைய வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) அன்னியச் செலவாணியை உள்நாட்டு பணமாக மாற்றும் போது காசேட்டின் ஆரம்ப பகுதி பிழையுடன் கூடியதாக முன்கொண்டு வரப்பட்டு அதன் காரணமாக நடப்பாண்டின் அன்னியச் செலாவணி இலாபம் ரூபா 7,199,256 மிகை கணிப்பிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

சபையினால் 128 லொத்தர் முகவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 223,894,560 தொகைக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், 7 முகவர்கள் மாத்திரம் மீதிக உறுதிப்படுத்தல்களை வழங்கியிருந்தனர். மேலும் மீதி உறுதிப்படுத்தல்களை அனுப்பிய 04 முகவர் நிறுவனங்களின் மீதி உறுதிப்படுத்தல்கள் சபையின் நிதிக்கூற்றுக்களின் மீதிகளுடன் ஒப்பிடப்பட்ட போது ரூபா 2,885,435 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் கடன் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டிருந்த 440 விற்பனை முகவர்களுக்கு 2014 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் வழங்கப்பட்டிருந்த லொத்தர் விற்பனை கூடுகளுக்காக கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 3,527,572 தொகையும் 49 விற்பனை முகவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மிதி வண்டில்களுக்காக 2016 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் அறவிடப்பட வேண்டிய ரூபா 382,700 தொகையுமாக ரூபா 3,910,272 தவணைத் தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 223,894,561 தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 4,839,325 கூட்டுத்தொகையான மீதிகள் 09 லொத்தர் விற்பனை முகவர்களிடமிருந்து 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் போது மரணமடைந்த விற்பனை முகவரிடமிருந்து கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 467,600 மீதி தொடர்பாக தேவையான சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விற்பனை முகவர்களுக்குரிய சபையின் ஏனைய கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 1,317,614 பெறுமதியான மீதிகள் திட்டவட்டமாக இனங்காணப்படாமல் இருந்ததுடன் அம்மீதிகள் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வருவதாக அவதானிக்கப்பட்டது.

(உ) 2016 ஆம் ஆண்டின் போது விற்பனையை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் சபையில் சேவை புரியும் இரண்டு வலய முகாமையாளர்களின் தனிப்பட்ட பெயரில் கடன் அடிப்படயில் ரூபா 105,000 பெறுமதியான உடனடி லொத்தர் சீட்டுக்கள்

வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே 30 ஆந் திகதி வரையிலும் அப்பணம் சபைக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்கு நீர் மற்றும் எரிபொருள் வழங்குவதற்காக 02 வெளி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 202,500 தொகை 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்ததுடன் உரிய நிறுவனத்தினால் இதுவரையிலும் சபைக்காக சேவை வழங்குதலும் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) கடன்பட்டோர் மீதிகளில் 32 ஆவது கலம்பு எயாபோட் சுபர் டிரோ லொத்தருக்காக சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 11,251,109 தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியின் போது சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள 128 விற்பனை முகவர்களில் 32 பேர் மாத்திரம் பிணை பொறுப்பு வைத்திருந்ததுடன் பிணை வைத்திருந்த விற்பனை முகவர்களுக்கு அந்த பிணை எல்லையை விஞ்சி ரூபா 22,411,113 மற்றும் பிணை வைக்காதிருந்த 96 முகவர்களுக்கு ரூபா 161,374,396 பெறுமதியான உடனடி லொத்தர்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டின் போது 40 விற்பனை முகவர்களுக்கு கடனுக்கு விற்பனை செய்த ரூபா 26,067,256 ஆன உடனடி லொத்தர் சீட்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய தொகை 2018 மே 30 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்படாதிருந்ததுடன் பிணைப்பொறுப்பின் மூலமும் அத்தொகையை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நிலுவைக் காலப்பகுதியை இனங்காண முடியாத ஏனைய கடன்பட்டோர் மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,232,991 ஆன மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,585,823 ஆன மீதிக்கு உரிய தனியாள் கடன்கொடுத்தோர் மீதிகள் அட்டவணை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அம்மீதி மாற்றமுராது காணப்பட்டதுடன் அத்தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 05 கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 15,249,243 ஆன கடன் மீதிகள் தொடர்பாக முறையாக ஆராய்ந்து பார்த்து தேவையான படிமுறைகளை எடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) சபையில் விற்பனை முகவராக செயற்பட்டிருந்த எனினும், 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடின்றி இருக்கின்ற 57 விற்பனை முகவர்களுக்குச் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 1,502,083 மற்றும் கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட ரூபா 556,606 தொகையான மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க்) சபையில் சேவையில் இருக்கின்ற போது 2003 ஆம் ஆண்டில் மரணமடைந்த மற்றும் அவ்வாண்டில் வேலை நீக்கத்திற்கு உள்ளாக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 240,983 தொகையான ஊக்குவிப்புப் பணத்தை தீர்த்து வைக்காமல் செலுத்த வேண்டிய மீதியொன்றாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) பல வருட காலமாக மாவட்ட விற்பனை முகவர்களுக்காகச் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 404,017 தொகை முறையான பிரகாரம் தீர்த்து வைக்கப்படாமல் மேலதிகமாக அறவிடப்பட்ட கணனி தவணைப் பணமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1997 இன் 35 ஆம் இலக்க நிதி (திருத்த) அதிகரச்சட்டத்தால் திருத்தஞ் செய்யப்பட்ட 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| (i) 14(2), 16(1) மற்றும் 16(4) ஆம் பிரிவுகள் | சபையால் வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகாரசபைகளுக்கான லொத்தர்களை நடாத்தும்போது குறித்த நிறுவனத்துடன் உடன்படிக்கையில் ஈடுபட வேண்டியிருந்தது. எனினும் கொவிசெத்த, சுப்பிறி வாசனா சம்பத, ஜாதிக சம்பத மற்றும் நிரோகா மற்றும் செவன லொத்தர்களின் பொருட்டு குறித்த நிறுவனங்களுடன் அவ்வாறான உடன்படிக்கையில் ஈடுபடாது மீளாய்வாண்டின் போது ரூபா 7,482,186,980 பரிசுகளாக வழங்கப்பட்டிருந்தன. மேலும், பரிசுகளைப் பெறுவதற்குச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 160,104,460 தொகையான பரிசுகள் மாத்திரம் திரட்டு நிதியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் காசலல்லாத பரிசுகள் மாற்றப்படவில்லை. |
| (ii) 17(2) ஆம் பிரிவு | லொத்தர் வருமானத்தில் அதற்குரிய செலவைக் கழித்ததன் பின்னர் எஞ்சும் தொகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், முன்னைய ஆண்டுகளில் அவ்வாறு செலவு வைக்கப்படாத ரூபா 653,427,833 தடுத்து வைக்கப்பட்டிருந்தது. |
| (iii) 20(2)(1) ஆம் பிரிவு | சபையினால் லொத்தரை நடாத்துவது சம்பந்தமான விதிகளைத் தயாரித்து விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அங்கீகாரத்தைப் பெற்று வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டியிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த புதிய லொத்தர் சீட்டுக்களுக்கான மெகா பவர், நிரோகா, டொலர் போச்சூன், ரன் கிருள மற்றும் செவன ஆகிய லொத்தர்களுக்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த லொத்தர்களின் விற்பனை வருமானம் ரூபா 2,851,185,380 தொகையாக இருந்ததுடன் அவ்வருமானத்தில் |

| | |
|---|---|
| | ரூபா 1,382,509,976 பரிசுகளுக்காகவும் ரூபா 529,309,006 தொகை முகவர்களுக்கான தரகாகவும் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i) VIII அத்தியாயத்தின் 10.1 மற்றும் 10.2 ஆம் பந்தி | வார இறுதி நாட்கள் அல்லது அரசின் விடுமுறை தினங்களில் கடமைகளில் ஈடுபடுவதற்காக 08 மணித்தியாலத்திற்கு குறையாத நாளொன்றிற்காக சம்பளத்தில் 1/20 படியொன்று வழங்க முடியுமாக இருந்த போதிலும், இந்த ஏற்பாடுகளை கவனத்தில் கொள்ளாமல் சபையினால் 12 மணித்தியாலங்களை விஞ்சி கடமையாற்றிய சகல தினங்களுக்கும் இரண்டு நாட்கள் கடமையாற்றியதாகக் கருதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறு இரண்டு நாட்களாக கருதிய 30 சந்தர்ப்பங்களுக்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 71,095 ஆகும். மேலும், வாரத்தில் வேலை செய்யும் நாட்களும் அரசாங்க விடுமுறை தினம் எனக் கருதி விடுமுறை தின சம்பளம் செலுத்தப்பட்ட 16 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு செலுத்திய தொகை ரூபா 23,940 ஆக இருந்தது. |
| (ii) XXIV அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2018 சனவரி 23 ஆந் திகதிய பீ/எல்ஓ/என்எல்பீ/கோப்/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள கடிதம் | 2005 சனவரி 01 முதல் ஆதனக் கடன் வங்கியினூடாக நடைபெற வேண்டியதுடன் அது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலமும் குறிப்பிடப் பட்டிருந்ததுடன் அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் மீளாய்வாண்டில் 15 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 23,496,950 ஆன ஆதனக்கடன் சபையின் நிதியை உபயோகித்து வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஆதனக் கடனுக்கான ஏற்பாடுகளின் படி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய வட்டியைக் கவனத்தில் கொள்ளாமல் சகல உத்தியோகத்தர்களுக்கும் 4 சதவீதமான குறைந்த வட்டி விகிதத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) 2011 பெப்ரவரி 9 ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துடைய 04 உத்தியோகத்தர்களுக்கான மாதாந்தம் வழங்கப்பட வேண்டிய எரிபொருள் எல்லையை மிகைத்து ரூபா 1,628,536 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது வியாபாரச் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற 24 வலய முகாமையாளர்களுக்கும் 17 விற்பனை மேம்பாட்டு உத்தியோகத்தர் களுக்கும் மீளாய்வாண்டில் ரூபா 3,298,368 ஆன எரிபொருள் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

**(உ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை**

---

| | |
|---|---|
| (i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | |
| • 6.5.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்குரிய ஆண்டறிக்கையின் வரைவொன்று நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| • 9.12 ஆம் பந்தி | - திறைசேரி அங்கீகாரமொன்று இல்லாமல் 2006 ஆம் ஆண்டில் சபையினால் அசரண சரண என்ற பெயரில் நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டு அதற்காக லொத்தர் பரிசு உடமையாளர்களின் நன்கொடை மற்றும் நிரோகா லொத்தர் விற்பனை வருமானத்தில் 0.5 சதவீதம் அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.<br>- திறைசேரி அங்கீகாரமொன்று இல்லாமல் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவியணியினருக்காக ரூபா 15,605,217 நலனோம்பல் படியொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டுகளிலும் இப்படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | • திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் பதவியணியினருக்காக ஊக்குவிப்பு முன்மொழிவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 77,792,278 ஆக இருந்தது.<br>• அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட இணைந்த படிகளுக்கு பதிலாக நாளொன்றிற்கு ஆகக் கூடியதாக ரூபா 3,000 வரையான விஷேட மேம்படுத்தல் படியொன்று பதவியணியினருக்கு பெறக்கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 3,470,700 ஆகும். |
| (iii) 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடீ/03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சபையால் தலைவருக்கும் செயற்பாட்டுப் பணிப்பாளருக்கும் மீளாய்வாண்டின்போது ரூபா 286,185 ஊக்குவிப்புப் படியாக வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iv) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சபையினால் வருடாந்த விளம்பரத் திட்டமொன்று தயாரித்து பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறாமல் ரூபா 940,272,567 தொகை செலுத்தப் பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது ரூபா 1,013,545,562 தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது வியாபாரச் சுற்றறிக்கையின் 03 மற்றும் 05 ஆம் பந்திகள் | மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த வாகன கைதவிர்ப்பு குழுவிற்கு இயந்திர பொறியியலாளர் ஒருவர் உட்பட வாகன மதிப்பீட்டு குழுவிற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் போக்குவரத்து பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்படாமல் 05 வாகனங்களும் 09 மோட்டார் சைக்கில்களும் விற்பனை செய்யப்பட்டிருந்தன. |
| (எ) | 1993 சனவரி 21 ஆந் திகதிய பீஈ1/70/7/Vol.11 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதம் | அரசாங்கத்திற்காக நடாத்தப்படும் சகல லொத்தர் வருமானத்திலிருந்து 16.5 சதவீதம் திரட்டு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட சம்பத் ரேகா, மெகா பவர் மற்றும் சபிரி தெலக்ஷபதி ஆகிய லொத்தர் வருமானங்களிலிருந்து 10 சதவீதம் மாத்திரம் அனுப்பிவைக்கப்பட்டதால் மேலும் திரட்டு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படாத பெறுமதி ரூபா 180,353,340 ஆக இருந்தது. |

## 2.5 போதியளவில் அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லொத்தர் சீட்டிழுப்பின் போது சீட்டிழுப்பிற்காக சமூகமளிக்கும் சபையின் உத்தியோகத்தர்களுக்கு முறையான சேவை கூற்றொன்று மற்றும் குறித்துறைக்கப்பட்ட கடமை கையளிப்பொன்று இல்லாமல் ஒரு சீட்டிழுப்பிற்காக ரூபா 1,200 முதல் ரூபா 4,500 வரையான வீச்சில் கொடுப்பனவு செய்யப்படடிருந்த போதிலும் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் மாத்திரம் அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 55,932,000 ஆக இருந்தது.

(ஆ) பதவியணியினரால் நாடு முழுவதும் பிரச்சார வண்டிகள் மூலம் ரூபா 64,724,000 பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மீது 17.5 சதவீதம் விற்பனை தரகுகள் ரூபா 11,326,700 தொகை மீளாய்வாண்டின் போது அச்செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சாரதி மற்றும் பிரச்சார உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படடிருந்த எவ்வாறாயினும் அச்செயற்பாட்டிற்காக முறையான அங்கீகாரம் ஒன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(இ) பதவியணிக்காக நடாத்தப்படும் 04 வெவ்வேறு நிதியங்களை கணக்காய்வு செய்வதற்காக தனியார் கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக்கணக்காய்வாளர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 235,000 ஆன கணக்காய்வுக் கொடுப்பனவிற்காக முறையான அதிகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான முதலீட்டிற்காக கிடைத்த வட்டி வருமானம் ரூபா 310,402,912 ஆக இருந்ததுடன் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட

கணக்கிடலின் பிரகாரம் வட்டி வருமானத்தின் 46 சதவீதம் அதாவது ரூபா 144,994,647 தொகை பரிசு ஒதுக்க நிதியத்திலான நிதியை முதலீடு செய்யப்பட்டதினாலாகும். அதற்காக உழைக்கப்பட்டுள்ள வட்டி வருமானம் முறையான அதிகாரமின்றி ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2017 ஏப்ரல் 13, 14 மற்றும் 15 ஆந் திகதிகளில் காலி தியகம மற்றும் அங்குணுபெலஸ்ஸ இடம்பெற்ற மேற்கொண்ட சிங்கள புத்தாண்டு நிகழ்ச்சிகளுக்கு சமூகமளித்த 18 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 119,000 ஆன விசேட மேம்படுத்தல் மற்றும் விசேட கடமை கொடுப்பனவும் அதற்கு மேலதிகமாக ரூபா 21,000 பெறுமதியான ரூபா 500 தொகையான 42 பரிசு உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தமை இதற்காக திறைசேரியின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 139,805,208 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 414,761,431 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 274,956,223 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சபையின் லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 17 சதவீதத்தினால் குறைவடைந்தமை காரணமாக மொத்த இலாபம் ரூபா 556,845,017 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிற்குப் பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகளில் பற்றாக்குறையொன்று இருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ஏனைய ஆண்டுகளின் போது நிதி விளைவுகளில் மிகையொன்று பெறப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் மிகை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 67 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்திய வரி என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பங்களிப்பு நேர் பெறுமதியைக் கொண்டிருந்தது. எனினும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2014 மற்றும் 2017 ஆண்டின் பங்களிப்பில் வீழ்ச்சியும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் பங்களிப்பின் வீழ்ச்சி 15 சதவீதம் அதாவது ரூபா 717,906,549 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் சபையின் இலாப விகிதம் மற்றும் தொழிற்படு மூலதன விகிதம் தொடர்பான பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | விகிதம் | ஆண்டு | |
|---|---|---|---|
| | | 2017 | 2016 |
| (i) | மொத்த இலாபம். (சதவீதம்) | 12.36 | 13.02 |
| (ii) | தேறிய இலாபம் / (நட்டம்) (சதவீதம்) | 0.83 | 2.05 |
| (iii) | நடைமுறைச் சொத்து விகிதம் | 1.65:1 | 1.34:1 |
| (iv) | விரைவுச் சொத்து விகிதம் | 1.61:1 | 1.31:1 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 3,423,237,530 இனால் அதாவது 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், அதன் காரணமாக மொத்த இலாப விகிதம் 0.66 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதற்காக விற்பனை அடிப்படையில் உற்பத்தி வரி விதிக்கப்பட்டமை காரணமாக இருந்தது.

(ஆ) சபையின் நடைமுறை மற்றும் விரைவு விகிதங்களை உச்ச மட்டத்தில் பேணிச் செல்வதற்காக மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டின் விரைவு விகிதம் 1.61:1 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் பரிசு ஒதுக்க நிதியம் மற்றும் ஊழியர் பணிக்கொடை நிதியம் அதற்காக காரணங்களாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றலை மதிப்பிடுவதற்காக செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகளும் மீளாய்வும்

(அ) நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு உரிய முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய லொத்தர் சீட்டுக்கள் மூலமான வருமானமும் விளம்பரக் கிரயமும் பின்வருமாறு.

| லொத்தரின் பெயர் | விற்பனை வருமானம் | | | | விளம்பரக் கிரயம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2016 | முரண்கள் | சதவீதம் | 2017 | 2016 | முரண்கள் | சதவீதம் |
| | ரூபா.மி | ரூபா.மி | ரூபா.மி | % | ரூபா.மி | ரூபா.மி | ரூபா.மி | % |
| மஹஜன சம்பத | 4,885 | 5,342 | (457) | (8.6) | 144 | 132 | 12 | 9.1 |
| வாசனா சம்பத | 814 | 1,143 | (329) | (28.8) | 74 | 93 | (19) | (20.4) |
| கொவிசெத | 4,053 | 4,011 | 42 | 1.0 | 135 | 121 | 14 | 11.6 |
| சுப்பிறி வாசனா | 1,023 | 1,683 | (660) | (39.2) | 69 | 83 | (14) | (16.9) |
| ஜாதிக சம்பத | 954 | 1,355 | (401) | (29.6) | 69 | 83 | (14) | (16.9) |
| சம்பத் ரேகா | 1,162 | 1,632 | (470) | (28.8) | 93 | 102 | (9) | (8.8) |
| வாசனா சம்பத சுப்பர் பிப்ட் | - | 154 | (154) | 0 | - | - | - | - |
| மெகா பவர் | 1,298 | 1,135 | 163 | 14.4 | 79 | 79 | 0 | - |
| பவர் லொட்டோ | - | 72 | (72) | 0 | | - | - | - |
| நிரோகா | 1,063 | 1,308 | (245) | (18.7) | 91 | 90 | 1 | 1.1 |
| மனுசத் மெஹவற | - | 30 | (30) | 0 | | - | - | - |
| சுபிரி தெலக்ஸபதி | 421 | 517 | (96) | (18.6) | 55 | 66 | (11) | (16.7) |
| ரஜ தினும | 101 | 140 | (39) | (27.9) | | - | - | - |
| சமூர்த்தி | 51 | 176 | (125) | (71.0) | - | 3 | (3) | (100) |
| செவன | 848 | 1,475 | (627) | (42.5) | 40 | 4 | 36 | 900 |
| சுப்பிரி கொவிசெத | 73 | - | 73 | - | | - | - | - |

(i) முன்னைய ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட 15 வகை லொத்தர் சீட்டுக்களுக்கு இடையே 03 வகையான லொத்தர்களின் இலக்கு அடையாமை காரணமாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய லொத்தர் சீட்டுகளுக்கு இடையே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 02 வகை லொத்தர்களில் மாத்திரம் வருமானம் அதிகரித்திருந்தது. எனினும் அந்த வருமானத்தின் அதிகரிப்பு 15 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியொன்றை எடுத்திருந்ததுடன் 10 லொத்தர் வகைக்குரிய வருமானம் 8.6 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையான வீச்சில் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 3,427 மில்லியன் குறைவடைந்திருந்ததுடன் அது 17 சதவீதமாக இருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் போது கொவிசெத லொத்தரின் வருமான அதிகரிப்பு ரூபா 42 மில்லியனால் அதாவது ஒரு சதவீதமாக இருந்த போதிலும் அதன் விளம்பரச் செலவினம் 11.6 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது.

(iii) மேற்குறிப்பிடப்பட்ட தரவுகளின் பிரகாரம் ரூபா 4,885 மில்லியன் தொகையான ஆகக்கூடிய வருமானத்தை உழைத்துள்ள மகஜன சம்பத லொத்தரின் விளம்பர கிரயம் விற்பனை வருமானத்தின் 2.9 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும் ரூபா 1,162 மில்லியன் வருமானத்தை உழைத்த சம்பத ரேகா லொத்தரின் விளம்பரக் கிரயம் விற்பனை வருமானத்தில் 8 சதவீதமான உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது சபையின் மூலம் ரூபா 139,805,208 ஆன இலாபமொன்றை உழைத்திருந்த போதிலும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்கிடலின் பிரகாரம் லொத்தர் விற்பனையால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு ரூபா 160,024,736 ஆன பாதகமான நிதி விளைவொன்று பெறப்பட்டிருந்தது.

| | (ரூபா) |
|---|---|
| தேறிய லொத்தர் விற்பனை வருமானம் | 15,638,283,224 |
| விற்பனைக் கிரயம் | (13,567,962,820) |
| | ------------------------ |
| மொத்த இலாபம் | 2,070,320,404 |
| விற்பனை விநியோக செலவினம் | (1,130,365,799) |
| நிர்வாக செலவினம் | (666,740,574) |
| நிதிச் செலவினம் | (36,583,170) |
| வருமான வரி (வட்டி வருமானத்தின் மீது வரி தவிர) | (396,655.597) |
| | -------------------- |
| லொத்தர் விற்பனை வரி பின்னான தேறிய இலாபம் | (160,024,736) |
| | ========= |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) லொத்தர் சீட்டின் விற்பனை விலையில் சபையின் நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்கு ஒதுக்கப்படும் சதவீதம் 22.18 ஆக இருந்த போதிலும் 23.88 சதவீதம் செலவிடப்பட்ட காரணத்தினால் செலவிடுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ள எல்லையை மிகைத்து 1.7 சதவீதம் அதாவது ரூபா 284,702,063 செலவிடப்பட்டிருந்தது.

(ii) நடப்பாண்டின் சபையின் ஏனைய வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 387,784,659 ஆக இருந்த போதிலும் ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 139,805,208 ஆக இருப்பதற்கு சபையின் பிரதான செயற்பாடான லொத்தர் விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உயர்ந்த நட்டத்தை ஏனைய வருமானங்களிலிருந்து மேவுகை செய்தமை காரணமாக இருந்தது.

(ஈ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 1,000 பொது அழைப்பு முறைமை கொள்வனவு செய்து முகவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 6,110,000 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நவம்பர் 16 ஆந் திகதி 650 பொது அழைப்புக்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தன. எனினும் 2018 சனவரி 19 ஆந் திகதி அப்பொருட்கள் சபைக்கு கிடைக்காதிருந்ததுடன் அப்பொருட்களின் தரம், நீண்டகாலப் பாவனை மற்றும் முகவர்களுக்கு அவற்றின் தேவைப்பாடு தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 16,381,031 பெறுமதியான 375 லொத்தர் கூடங்களை உற்பத்தி செய்து வழங்குவதற்காக 2017 ஒக்தோபர் 23 ஆந் திகதி கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 2018 மே 25 ஆந் திகதி அளவில் வழங்கப்பட்டிருந்த விற்பனை கூடங்களின் எண்ணிக்கை 150 ஆக இருந்தது. வழங்குனருடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாததன் காரணமாக தாமத கட்டணங்களை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டின் போது நடாத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்புக்களின் எண்ணிக்கை 1092 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த எண்ணிக்கை 1292 வரை 200 தடவைகளால் அதிகரித்திருந்தது. எனினும் லொத்தர் விற்பனை வருமானம் முன்னைய ஆண்டினை விட ரூபா 3,423,237,530 ஆல் அதாவது 17 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்பட்டிருந்த சீட்டிழுப்புக்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட பரிசுக் கட்டமைப்பினை கருத்திற்கொள்ளும் போது பரிசு விலகல் 20 முதல் 100 வரை வழங்கப்பட்ட சதவீதம் 99 சதவீதமாக இருந்ததுடன் ஏனைய பரிசுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த சதவீதம் 1 சதவீதமான மிகவும் உயர்ந்த கீழ் மட்டத்தில் காணப்பட்டதாக பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

லொத்தரின் பெயர் மற்றும் வழங்கப்பட்ட வெகுமதி சதவீதம்

| | **கொவிசெத** | **ஜாதிக சம்பத** | **மஹஜன சம்பத** | **மெகா பவர்** | **செவன** | **தெலக்ஷபதி** | **சுபிரி வாசனா சம்பத** | **வாசனா சம்பத** | **நிரோகா** | **சம்பத் ரேகா** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சீட்டிழுப்பு எண்ணிக்கை** | **234** | **102** | **240** | **103** | **46** | **52** | **102** | **101** | **155** | **155** |
| **பரிசு வீச்சு ரூபா** | **%** | **%** | **%** | **%** | **%** | **%** | **%** | **%** | **%** | **%** |
| | 99.7226 | 99.2466 | 99.2406 | 99.7214 | 99.6535 | 97.0014 | 99.6694 | 99.9122 | 99.4183 | 99.66 |
| | 0.2738 | 0.6841 | 0.6840 | 0.2747 | 0.2244 | 2.9840 | 0.3259 | 0.0861 | 0.5713 | 0.32 |
| | 0.0033 | 0.0623 | 0.0685 | 0.0036 | 0.1172 | - | 0.0043 | - | 0.0099 | 0.00 |
| | - | 0.0064 | 0.0062 | - | 0.00446 | 0.0146 | - | - | - | 0.00 |
| | 0.0003 | - | - | 0.0003 | - | - | 0.0004 | 0.0003 | 0.003 | |
| | - | 0.0006 | 0.0007 | - | 0.0004 | - | - | - | - | |
| | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் முகவர்களிடமிருந்து பிணை முறி ஒன்றை பெற்றுக்கொள்ளும் தேவை தொடர்பாக பணிப்பாளர் சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கையில் அத் தீர்மானத்தை கவனத்தில் கொள்ளாது ரூபா 8,290,055 மேலதிக கிரயமொன்று மேற்கொண்டு நாணயக்கடித காப்புறுதி மேவுகையொன்று 2016 யூலை முதல் 2017 யூலை வரையான காலப்பகுதிக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் சபையின் கீழ் பதிவு செய்துள்ள 118 முகவர்களில் 27 பேர் இந்த முறைமைக்கு உள்ளெடுக்கப்படாதிருந்ததுடன் அதற்காக காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்காக 06 மாதங்களை மிகைத்துள்ள கடன் மீதி ரூபா 42,073,492 ஆக இருந்த போதிலும் அந்த கடன் மீதியில் ஆபத்துடன் உள்ள கடன் மீதிகளை இனங்கண்டு காப்புறுதி மேவுகையின் மூலம் ஈடுசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை.

(ஆ) சபையினால் அச்சிடப்பட்டிருந்த லொத்தர் சீட்டுக்களின் தேவைகள் உரிய பிரகாரம் சரிபார்க்கப்படாமல் அச்சிடல் கட்டளை வழங்கப்பட்டமையின் காரணமாக ஒவ்வொரு சீட்டிழுப்புத் தடவையிலும் அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்களில் 12.26 சதவீதமான அளவு விற்கப்படாமல் எஞ்சியிருந்ததுடன் அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்த லொத்தர் சீட்டுக்களின் அச்சிடல் கிரயம் ரூபா 53,282,897 ஆக இருந்தது.

(இ) சபையின் இருப்பு வெளியேற்றல் நடைமுறையின் பிரகாரம் விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்களின் எஞ்சிய பெறுமதி இனங்காணப்ட்டு கணக்கீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் நிதியங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த ஆதனக் க்டன்களுக்குரிய 108 உரித்துகளுக்காக இரத்துச் செய்யப்படாத அன்டோனித் அற்றோனி தத்துவத்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் நிறுவகத்தின் பதவியணியினர், மாவட்ட விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் ஆகியோரை மதிப்பீடு செய்யும் நோக்கில் ''மஹத்மா'' என்ற பெயரில் விருது வழங்கும் விழாவொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன், மதிப்பீடு செய்வதற்காக தேர்வளவுகள் தயாரிக்கப்படாமல் சபையினால் அதன் மதிப்பீடு மற்றும் செயற்பாடு என்பன பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகி தெரிவுசெய்யப்பட்ட விளம்பர கம்பனிக்கு வழங்கி அதற்காக ரூபா 10,388,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சபையின் விற்பனை முகவர்கள் இம்மதிப்பீட்டு செயற்பாட்டிலிருந்து முழுமையாக அகற்றப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சிக்காக எதிர்பார்க்கப்பட்ட பங்குபற்றுனர்கள் மதிப்பீடு செய்யப்படாதிருந்த காரணத்தினால் 1,100 பேருக்காக வசதிகள் செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறு வருகை தந்தோர் 700 பேராக இருந்தனர்.

(ஊ) 32 ஆவது கலம்பு எயார்போர்ட் சுப்பர் ரோ லொத்தர் சீட்டுக்கள் விற்பனைக்காக பெறுகை மேற்கொள்ளப்படாமல் இரண்டு சந்தர்ப்பங்களின் போது தெரிவுசெய்யப்பட்ட விளம்பர கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும் விற்பனை கம்பனிக்கு வழங்குவதற்கு இனங்கப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை அடிப்படையில் 85 சதவீதம் அதாவது ரூபா 46,240,297 தொகையான பிணைமுறி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,200,000 ஆன பிணைமுறி மாத்திரமே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 44,040,297 ஆன பிணைப் பொறுப்பினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழான சொத்துக்கள் என்பவற்றை அலுவலகத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கு வழங்கும் போது அவற்றை சரியாக பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமையால் மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வின் போது காணாமல் போனதாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 43,463,400 பெறுமதியான 879 பொருள் உறுப்படிகள் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தேசிய லொத்தர் சபையினால் 480 தொலைபேசிகளுக்கு மேற்பட்ட மாதாந்த பட்டியல் தீர்ப்பதற்கு மேலதிகமாக 9 இலக்கங்களுக்கு நேரடி அழைப்புக்களை ஏற்படுத்தும் வசதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய 60 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட தொலைபேசி படிகள் பெற்றுக்கொள்ளும் 15 உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய 45 கிளை உத்தியோகத்தர்களுக்கும் அத்தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தொலைபேசிக் கிரயம் ரூபா 30,214,282 ஆக இருந்தது. மேலும் தொலைபேசி வசதிகளை பெறும் 17 உத்தியோகத்தர்களுக்கு அனுமதிக்கப்பட்ட எல்லையை மிகைத்து செலவிடப்பட்ட ரூபா 514,299 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் செயற்படுத்தப்படுகின்ற மஹஜன சம்பத லொத்தரின் அச்சிடல் நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டிலிருந்தும் நிரோகா லொத்தரின் அச்சிடல் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டிலிருந்தும் அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தால் இதுவரை நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக எழுத்துமூல உடன்படிக்கையொன்று காணப்படவில்லை. 2016 ஆம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டிருந்த லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக பெறுகைகள் நடைமுறைகளின் மூலம் ஒரு சீட்டினை அச்சிடுவதற்காக கிடைத்த ஆகக் குறைந்த விலை ரூபா 0.3570 ஆக இருந்த போதிலும் அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்திற்கு மஹஜன சம்பதவின் ஒரு லொத்தர் சீட்டினை அச்சிடுவதற்காக ரூபா 0.5021 தொகையும் நிரோகா லொத்தர் சீட்டினை அச்சிடுவதற்காக ரூபா 0.6637 தொகையும் செலுத்தப்பட்டு வந்தது. போட்டி விலைகளை கவனத்தில் கொள்ளாமையின் காரணமாக மீளாய்வாண்டிற்காக மாத்திரம் மஹஜன சம்பத லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக ஏற்படக்கூடிய மதிப்பிடப்பட்ட நட்டம் அண்ணளவாக ரூபா 31,791,602 ஆகவும் நிரோகா லொத்தர் சீட்டினை அச்சீட்டினால் மதிப்பிடப்பட்ட நட்டம் அண்ணளவாக ரூபா 7,815,276 தொகையுமாக இருந்தது.

(ஆ) சபையினால் அதன் கணக்கு நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக 2003 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட மத்தியமடுத்தப்பட்ட Sage ACCPAC என்ற பெயருடைய கணனி மென்பொருள் 2016 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்டமையின் காரணமாக அந்த மென்பொருளில் இருந்து பெறக்கூடியதாக இருந்த சேவைகள் வரையறுக்கப்பட்டிருந்தன. முன்னர் காணப்பட்ட மத்திய மயப்படுத்தல் திட்டத்தின் மூலம் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக காணப்பட்ட நம்பகத்தன்மையும் இந்த பன்முகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் கேள்விக்குறியாக இருந்ததுடன் உரிய வேறுபாடுகளினால் ஏற்பட்ட ஆபத்துக்களின் பொறுப்புக்களை கையேற்பதற்கு இந்த மென்பொருளை அறிமுகப்படுத்திய கம்பனியும் நிராகரித்திருந்தது.

(இ) 2017 யூன் 28 ஆந் திகதி நடைபெற்ற 1,500 கொவிசெத்த விசேட சீட்டிழுப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,484,800 புத்தகப் பெறுமதியான 58 தங்க காசுகள் 2018 மே 30 ஆந் திகதி வரையிலும் மீண்டும் மதிப்பீடு செய்யப்படாமல் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது.

(ஈ) வெற்றியாளர்கள் முன்வராத பரிசுத்தொகை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் பின்னர் திறைசேரிக்கு அனுப்பி வைவைக்கப்பட வேண்டிய போதிலும் 2013/2014 ஆம் ஆண்டின் போது பரிசு ஒதுக்க நிதியத்திலிருந்து பரிசு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,350,000 பெறுமதியான ஜீப் வண்டியொன்று பல சந்தர்ப்பங்களில் விசேட சீட்டிழுப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் வெற்றியாளர் ஒருவர் உருவாகாமல் இருந்ததுடன் நிதி அமைச்சின் அங்கீகாரமின்றி அது சபையின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணியின் உரித்து சட்டரீதியாக முழுமையாக கையளிக்கப்படாதிருக்கும் போது சபையினால் அந்த உத்தியோகத்தருக்கு ரூபா 774,480 தொகையான வீடமைப்பு கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் வீட்டை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட காணி, அந்தக் காணி உரிமையாளரினால் உயிர்வாழும் வரையான உரித்தை வைத்துக்கொண்டு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. காணியின் உரிமையாளரினால் இந்தக் காணியின் உரித்தை அகற்றி காணியின் உரித்தை உத்தியோகத்தருக்கு கையளிப்பதற்கு எழுத்துமூல வெளிப்படுத்தலொன்று தனியார் சட்டத்தரணி கம்பனியொன்றின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், பின்னர் உரிய ஆதனத்தின் உரித்தை மீண்டும் கோரி அந்த தரப்பினரால் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரதிவாதியாக சபையின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. சபையில் தொழில் தகைமை பெற்ற சட்டத்தரணியொருவர் இருக்கும் போது இந்த வழக்கின் 11 தவணைகளுக்காக சபையினால் ரூபா 211,475 தொகை வழக்கறிஞர் கட்டணமாக வெளிச்சட்டத்தரணி ஒருவருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் இல்லாமல் மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் 01,02 மற்றும் 03 ஆகிய திகதிகளில் மூன்று நாள் நடைபெற்ற 06 வகைகளுக்குரிய 09 சீட்டிழுப்புகளுக்காக அச்சிடப்பட்ட 4,707,000 லொத்தர் சீட்டுக்கள் அளவில் ரூபா 32,556,000 பெறுமதியான 1,085,200 லொத்தர் சீட்டுகளுக்கள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 16,845,862 ஆன மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஆம் ஆண்டின் போது முகவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விற்பனை வருமானத்திற் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 13,174,730 பெறுமதியான உடனடி லொத்தர் சீட்டுக்கள் மீளாய்வாண்டின் போது அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் அது கருத்திற் கொள்ளாமல் 2016 ஆம் ஆண்டின் திரட்டிய விற்பனை அடிப்படையில் பதவியணியினருக்கும் முகவர்களுக்கும் ரூபா 35,813,250 ஊக்குவிப்பு படிகளாக கொடுப்பனவு முன்னைய ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 32 ஆவது கலம்பு விமான நிலைய சுப்பிரி டிரோ மற்றும் டொலர் போச்சூன் லொத்தர் சீட்டின் விற்பனை ஐ.அ.டொ. மற்றும் இலங்கை ரூபாய் மூலமும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அத்தகைய சகல பெறுவனவுகளும் சபையின் வங்கிக்கணக்கிற்கு ஐ.அ.டொலரிலேயே செலவு வைக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் இலங்கை ரூபாய் மூலம் சேகரிக்கப்பட்ட பணத்தை ஐ.அ.டொலராக மாறறிக்கொள்வதற்கு தனியார் பண மாற்றுனர்கள் ஊடாக நடவடிக்கை எடுப்பதற்கு விற்பனை பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு முறையற்ற அனுமதியொன்ற வழங்கப்பட்டிருந்தது.

## 4.5 நிதிய முகாமைத்துவம்

சபையினால் நிதியத்தின் மக்கள் வங்கியினல் பேணிச்செல்லப்படும் சேகரிப்பு கணக்கிற்கு விற்பனை முகவர்களால் பணத்தை வைப்புச் செய்யும் போது வங்கியால் 0.05 சதவீதமான சேவைக் கட்டணங்களாக ரூபா 36,226,108 அறவிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக சயினால் எவ்வித கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.6 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

வியாபாரப் பெயருக்காக சபையினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 7,650,000 செலவில் கொள்வளவு செய்யப்பட்ட 02 ட்ரக் வண்டிகளும் மீளாய்வாண்டின் போது ரூபா 20,750,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 05 சிங்கள் கெப் வண்டிகளும் அந்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாது 2018 மே 30 ஆந் திகதி வரையிலும் நிறுவனத்தின் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் சபைக்கு சொந்தமான BMW(A1) 5860 ஆம் இலக்க மோட்டார் வாகனமும் வருடம் முழுவதும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் சட்ட ரீதியான சேவைகள் பதவிக்காக சட்ட உத்தியோகத்தரொருவர் இருக்கையில் மீளாய்வாண்டின் போது சட்ட நடவடிக்கைகளுக்காக வெளி நிறுவனங்களுக்காக ரூபா 1,656,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 1269 ஆவது கொவிசெத சீட்டிழுப்பு முதல் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் மொழி மற்றும் சித்திர வடிவமும் மாற்றப்பட்டு ஒவ்வொரு சீட்டிழுப்பிற்காகவும் 35,000 சீட்டுக்கள் அச்சிடப்பட்டு அப்பிரதேசங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 157 ஆவது சீட்டிழுப்பின் போது 5,495,000 லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 655,998 கிரயத்தையுடைய ரூபா முழு லொத்தர் சீட்டுக்களில் 34.10 தவீதம் அல்லது 1,874,280 லொத்தர்சீட்:டுக்கள் விற்பனை செய்யப்படாமல் எஞ்சியிருந்தது.

(இ) 32 ஆவது கலம்பு எயார்போர்ட் சுபர் டிரோ லொத்தர் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) லொத்தர் விற்பனை செய்வோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 26,691,000 தொகை நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் சபைக்கு நேரடியாக கிடைக்க கூடிய ரூபா 184,100 ஆன வட்டி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ii) இந்த லொத்தர் சீட்டுக்களின் பரிசுக்காக வழங்கப்பட்ட வேண்டிய வண்டியின் பெறுமதி லொத்தர் சீட்டு வருமானத்தின் 47 சதவீதமான ரூபா 12,697,755 ஆக இருந்த போதிலும், வழங்கப்பட்ட வண்டியின் பெறுமதி 67 சதவீதமான ரூபா 18,000,000 ஆக இருந்தமையால் நிர்ணயிக்கப்பட்ட பரிசுத்தொகையை மிகைத்து ரூபா 5,305,245 செலவிடப்பட்டிருந்தது.

(iii) இந்த சீட்டிழுப்பிற்காக அச்சிடப்பட்ட மொத்த லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்வதற்கு முன்னர் சீட்டிழுப்பு நடாத்தப்பட்டமையால் எஞ்சிய 7204 லொத்தர் சீட்டுக்களுக்குரிய அச்சிடல் கிரயமான ரூபா 396,220 தொகை சிக்கனமற்ற செலவினமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்

32 ஆவது கழம்பு எயார்போட் சுபர் டிரோ லொத்தர் சீட்டிழுப்பிற்கு செல்லுபடியான ரூபா 627,750 பெறுமதியான காணாமல் போன 135 லொத்தர் சீட்டுக்களின் பெறுமதியை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.9 சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழங்குகளின் சட்டரீதியான சம்பவங்கள்

சபைக்கு எதிராக 6 வெளிநபர்களினால் வேலை இடைநிறுத்தியமை சபைக்கு வழங்கிய சேவைகளுக்கான கொடுப்பனவு செய்யாமை இரத்துச் செய்யப்பட்ட வெகுமதி உரித்துக்கு கடன் வழங்கப்பட்டமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 84,905,330 இழப்பீடாக கோரி 6 நீதிமன்றங்களால் வழங்கு தொடர்ப்பட்டுள்ளது.

### 4.10 முறைப்படி கையேற்கப்படாத காணிகளில் செயற்திடங்களை ஆரம்பித்தல்

அநுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் அரசிற்குரிய 02 காணிகளில் சுற்றுலா விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டு பேணப்படாதிருந்த போதிலும் அக்காணியின் உரித்தினை சட்டரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.11 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சபையின் வழங்கல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வளங்கள் வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கோ வழங்க முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக சபையின் 08 உத்தியோகத்தர்கள் நிதியமைச்சிற்காக மீளாய்வாண்டின் சனவரி முதல் விடுவிக்கப்பட்டிருந்தனர். மேலும், அந்த உத்தியோகத்தருக்கு சபையிலிருந்து செலுத்தப்பட்ட ஊழியரி ஊதியம் மற்றும் ஊக்குவிப்பு படியான ரூபா 1,589,656 தொகையினை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.12 பதவியணியினர் நிர்வாகம்

(அ) சபைக்கு ஒப்பந்த அடிப்படையில் 10 வலய முகாமையாளர்கள் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த 14 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து 04 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும், ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம் பிரசித்த அறிவித்தல் வெளியிடப்படாதிருந்ததுடன் நேர்முக பரீட்சைக்காக வரிசை அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அங்கீகரிக்கப்பட்ட விடயப் பரப்பு மற்றும் சேவை அனுபவம் பூர்த்தி செய்யப்பட்டிராத நபரொருவரும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் தொழிலாளர் மற்றும் உதவி அறிவிப்பாளர் பதவி 02 இற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 31 பேராக இருந்த போதிலும் அந்த எண்ணிக்கை மிகைத்து 20 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 1,381,698 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாடொன்று இல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட நிதி உத்தியோகத்தர் பதவியின் கீழ் விற்பனை / மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அப்பதவிகளுக்காக தேவையான தகைமைகள் குறிப்பிடப்படாமல் முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிக்கும் ஒருவர் 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதல் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தரின் 03 சம்பள ஏற்றங்களை இடைநிறுத்துமாறு கட்டளையிடப்பட்டிருக்கையில் அவ்வாறு செய்யாமல் புதிய பதவியில் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் தொழிலாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை கோவைகளில் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம் பகிரங்க விளம்பரம் வெளியிடப்பட்டு கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் அடிப்படையில் க.பொ.த (சா.தரம்) பரீட்சைக்கு தோற்றியவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், அப்பதவிக்கு பரீட்சை தோற்றியதாக உறுதிப்படுத்தப்படாத 03 உத்தியோகத்தர்களும் பரீட்சைக்கு தோற்றியதாக குறிப்பிடப்பட்டிருந்ததும் கல்விச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாத 04 தொழிலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(உ) சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பதவி (விற்பனை மற்றும் மேம்படுத்தல்) பிரதான சந்தைப்படுத்தல் உத்தியோகத்தராக மாற்றப்பட்டு பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களின் பரிந்துரையின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், அப்பதவிக்குரிய சம்பளம் ரூபா 41,566 ஆக இருந்த போதிலும், அதனைக் கருத்திற் கொள்ளாமல் ரூபா 90,000 சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக சபையின் ஏனைய பதவியணியினருக்கு செலுத்தப்படும் ஊக்குவிப்பு கொடுப்பனவும் மாதாந்தம் 200 லீற்றர் எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் குறித்த சம்பளத்தை மிகைத்து மாதாந்தம் ரூபா 49,232 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய படிகளாக மாதாந்தம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 30,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 295,392 தொகையும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 590,784 தொகையும் மீளாய்வாண்டின் போது ரூபா 581,208 தொகையுமாக மொத்தம் ரூபா 1,467,384 தொகை சம்பளமாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 பிரிவின் பிரகாரம் மனித வள முகாமைத்துவத்திற்கான கைநூலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.13 சந்தைப் பங்குகள்**

இலங்கையின் இரு அரச நிறுவனங்களான தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பவற்றின் மூலம் லொத்தர் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது தேசிய லொத்தர் சபையின் சந்தைப் பங்குகள் 54.5 சதவீதமாக இருந்ததுடன் அபிவிருத்தி லொத்தர் சபையினது சந்தைப் பங்குகளை தேசிய லொத்தர் சபையின் சந்தைப் பங்குகளுடன் ஒப்பிடுகையில் அது 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் 2 சதவீதத்தாலும் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருந்தன. மேலும், 2012 ஆம் ஆண்டு முதல் அது வருடாந்தம் தளம்பலுக்குட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | லொத்தர் விற்பனை வருமானம் | | தேசிய லொத்தர் சபையின் சந்தைப் பங்கு |
|---|---|---|---|
| | தேசிய லொத்தர் சபை | அபிவிருத்தி லொத்தர் சபை | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| 2017 | 16,747 | 13,982 | 54.5 |
| 2016 | 20,170 | 15,314 | 56.84 |
| 2015 | 17,394 | 12,265 | 58.65 |
| 2014 | 15,153 | 12,592 | 54.62 |
| 2013 | 14,537 | 10,611 | 57.80 |
| 2012 | 12,024 | 10,668 | 52.98 |

## 4.12 தகவல் தொழில்நுட்ப (IT) பொது கட்டுப்பாட்டு முறைமையின் நலிவுகள்

சபைக்கு சொந்தமான கணனி முறைமையில் காணப்பட்ட பின்வரும் வழுக்களை மாற்றியமைப்பதற்காக போதிளவிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) கணனி முறைமையில் தரவுகளை உள்ளடக்குகின்ற மற்றும் தரவுகளை மாற்றுகின்ற நபர்களின் தேவைகளை பரிமாறிக்கொள்ளும் வகையில் முறையான இரகசிய இலக்க முறைமை பயன்படுத்தப்படாமை.

(ஆ) அச்சிடப்பட்டு களஞ்சியத்துக்கு கிடைத்துள்ள லொத்தர் சீட்டுக்களின் அளவை விஞ்சி விற்பனை பட்டியல் விநியோகிக்கும் இயலுமை சபைக்குரிய தற்போதைய கணனி முறைமையில் காணப்படுகின்றமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை

(இ) விற்பனை முகவர்களுக்கிடையே உள்ளக மாற்ற சீட்டுக்கள் தொடர்பாக தரவு முறைமையில் உள்ளடக்கக்கூடிய வகையில் கணனி முறைமையை அபிவிருத்தி செய்யாமை. இதன் காரணமாக சபையினால் விநியோகிக்கப்பட்ட சீட்டுக்கள் தொடர்பான இறுதி பொறுப்பு ஏற்கவேண்டிய தரப்பினரை குறிப்பாக இனங்காண்பதற்கு முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமை.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் போது சபை பயன்படுத்தப்படும் சகல வாகனங்களையும் மேற்பார்வை செய்வதற்கு வாகன முகாமைத்துவ மற்றும் வாகனங்கள் இருக்குமிடத்தை இனங்காண்பதற்காக ரூபா 740,000 செலவு செய்து (Vehicle Management & Vehicle Tracking Module) மொடியுலொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் தொழில்நுட்ப உபகரணங்கள் முறையாக பயன்படுத்தப்படாத காரணத்தினால் 02 வாகனங்களுக்குரியதாக மாத்திரம் அந்த உபகரணங்கள் செயற்படுத்தப்பட்டு வந்தது. எனினும் அது தொடர்பாக முகாமைத்துவத்தின் எவ்வித கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

-

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்/டீஜீ/17 ஆம் இலக்க அரச கொள்கைகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சிநிரலின்'' பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் சபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்காததன் காரணமாக தமது விடயப் பரப்பிற்கு உட்படும் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மைல்கல்லையும் இலக்குகளை அளவிடுவதற்காக சுட்டிகளையும் இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சபையின் சகல பெறுவனவுகளுக்காக பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை மேம்படுத்தல் உருப்படிகளுக்காக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தியிருந்த 11 வகை லொத்தர்களில் 06 வகைகளுக்காக முறையான பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமல் அச்சிட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மேலும் 2015 மே 31 ஆந் திகதி அச்சிட்டிற்காக புதிய அச்சகர் ஒருவரை தெரிவு செய்வதற்கு தேவையான பெறுகை செயற்பாடுகள் 2018 மே 30 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) விளம்பர நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை காலம் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் மீண்டும் பெறுகை மேற்கொள்ளாமல் காலம் நீடிக்கப்பட்டு அந்நிறுவனங்களிலிருந்து இச்சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 6.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுகளில் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,392,287 தொகையான ஊழியர் பணிக்கொடைப் பணத்தை மீண்டும் அறவிடுமாறு பொது முயற்சிகளுக்கான குழு 2013 மார்ச் 21 ஆந் திகதி கட்டளையிட்ட போதும், அப்பணத்தை அறவிடுவதற்கோ அல்லது பெற வேண்டிய தொகையாக அதனை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ஊழியர் பணிக்கொடைப் பணத்தை சபைக்கு மீளளிக்குமாறு உரிய ஓய்வூதிய உத்தியோகத்தருக்கு எழுத்துமூல அறிவித்தல் மாத்திரம் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2014 நவம்பர் 04 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வொக்சோல் வீதியில் உள்ள 112 பேர்ச் காணியில் புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்க வேண்டியிருந்தது. எனினும் 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் கட்டிடத்தின் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கான கட்டிட நிர்மாண வடிவமைப்பாளர் ஒருவரை தெரிவு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த நிர்மாணம் 2018 மே 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சபையின் அலுவலகம் மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக 03 கட்டிடங்களுக்காக செலுத்தப்பட்ட வாடகை ரூபா 26,907,240 ஆகும்.

## 6.3 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

சபையினால் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக வருடாந்தம் 700 மெ.தொன் கடதாசிகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த லொத்தர் சீட்டுக்கள் சந்தைக்கு விடுவிக்கப்பட்டதன் பின்னர் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பினை குறைப்பதற்காக எந்த மாற்று வழிகளையும் எடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை (ERP வசதிகள் கொண்ட ACCPAC முறைமை) பண்முகப்படுத்துவதன் பேரில் வீழ்ச்சியடைந்துள்ள கொடுக்கல் வாங்கல்களை நாளது வரையாக்காமை மற்றும் சரிப்படுத்தாமை, மென்பொருளை சரியாக பயன்படுத்தாமை.<br>(ii) மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை கணக்கீடு செய்யப்படாமை.<br>(iii) மாதாந்தம் புதிய புதிய நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் அதிகமாக பயன்படுத்துவது மற்றும் ஒரே இலக்கத்தின் கீழ் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் இடல், பொது நாட்குறிப்பு சரியாக பராமரிக்கப்படாமை, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகாரமின்றி கணக்கீடு செய்தல். |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்கள் முகவர்களினால் மீண்டும் சபைக்கு கையளிக்கப்படாதிருக்கும் போது அவர்களிடமிருந்து அறவிடவேண்டிய மிகைக் கட்டணம் கணக்கீடு செய்யப்படாமை.<br>(ii) லொத்தர் சீட்டுக்களின் தொகுதி இலக்கம் பிழையாக ஏனைய லொத்தர் சீட்டுக்களில் அச்சிடப்பட்டு விநியோகிக்கும் இயலுமையை தடுத்து பாதுகாக்கும் முறைமையொன்றை அறிமுகப்படுத்தப்படாமை. |
| (இ) மனிதவள முகாமைத்துவம் | பதவி உயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்புகள் உரிய நடைமுறைக்கு இணங்க மேற்கொள்ளாமை மற்றும் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கான திட்டம் தயாரிக்கப்படாமை. |
| (ஈ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | பன்முகப்படுத்தப்பட்ட கணனி முறைமையின் மூலம் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமை. |
| (உ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்க சமர்ப்பிக்கப்படாமை. |
| (ஊ) களஞ்சிய நிர்வாகம் | விற்பனை மேம்படுத்தல் உருப்படி இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்படாமை. |